RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 90 | ஏப்ரல்.8 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பேரம் பேசுவதும், பிளாக்மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதல்வரின் வேலையா? ஸ்டாலின் கண்டனம்

சென்னை: ஏப்.8-

“பாஜக எம்எல்ஏவைத் தேர்ந்தெடுத்தால்தான் மதுரைக்கு மெட்ரோ தருவோம் என்று பேரம் பேசுவதும், பிளாக்மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதல்வரின் வேலையா?” என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “பாஜக எம்எல்ஏவை தேர்ந்தெடுத்தால்தான் மதுரைக்கு மெட்ரோ தருவோம் என்று பேரம் பேசுவதும், பிளாக்மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதல்வரின் வேலையா?

அரசியலமைப்பின் மீது உறுதிமொழி ஏற்ற ஒரு முதல்வர், எதிர்க்கட்சி ஆளும் மாநிலத்தில் வந்து இப்படி பேசுவதற்கு வெட்கப்பட வேண்டும். நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய



அரசின் புறக்கணிப்பை மீறி, தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வரும் சாதனைத் திட்டங்கள் எத்தனை என்று அவருக்குத் தெரியுமா?. தெரியாவிட்டால் கேட்டுத் தெரிந்துகொண்டு பேச வேண்டும்.

டபுள் எஞ்சின் என்று நீங்கள் பீற்றும் டப்பா எஞ்சின் மாநிலங்களையும் தாண்டி, திராவிட மாடல் ஆளும் தமிழ்நாடுதான் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை சாதித்துள்ளது என்பது நினைவில் இருக்கட்டும்” எனத் தெரிவித்தார்.

முன்னதாக, மதுரை தெற்கு தொகுதியில் பாஜக வேட்பாளர் ராம.சீனிவாசன் வேட்புமனுத் தாக்கலில் பங்கேற்பதற்காக மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் நேற்று மதுரை வந்தார். அப்போது பேசிய அவர், “மதுரை தெற்கு தொகுதி வேட்பாளர் ராம ஸ்ரீநிவாசன் வெற்றி பெறுவார். அவர் எம்.எல்.ஏ., ஆனதும் பிரதமர் மோடியிடம் அவரை அழைத்துச் செல்வோம். பிரதமரை அவர் சந்தித்ததும் மதுரைக்கு மெட்ரோ ரயில்திட்டம் வந்துவிடும்” என்று பேசியிருந்தார். இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் அதற்கு பதிலடி கொடுத்துள்ளார்.

## கல்பாக்கம் அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு



கல்பாக்கம்: ஏப்.8-

கல்பாக்கத்தில் உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக ஈனுலை, மாற்ற நிலையை அடைந்துள்ளதற்காக அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, புதிய அணுமின் நிலையம் கடந்த 2004ம் ஆண்டிலிருந்து பாவினி என்ற பெயரில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 2024ம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் மோடி, மேற்கண்ட புதிய அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், தோரியத்திலிருந்து, நியூட்ரான் பிரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இது படிப்படியாக முன்னேறி மின் உற்பத்தியை தொடங்கும் நிலையில் உள்ளது. இதுகுறித்து, பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், ”இந்தியா தனது அணுசக்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுத்து, தனது அணுசக்தி பயணத்தில் ஒரு தீர்க்கமான அடியை எடுத்து வைத்துள்ளது. கல்பாக்கத்தில், உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக அணு உலை நிலை மாற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த மேம்பட்ட அணு உலை, தனது அறிவியல் திறனின் ஆழத்தையும், நமது பொறியியல் முயற்சியின் வலிமையையும் பிரதிபலிக்கிறது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில், நமது பரந்த தோரியும் இருப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு தீர்க்கமான படியாகும். இந்தியாவுக்கு, இதுபெருமைக்குரிய தருணம். நமது விஞ்ஞானிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்” என தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## “பாஜகவுடன் ஸ்டாலினுக்கு ரகசிய உடன்பாடு என மம்தா பேசுவது அபத்தம்” ஜோதிமணி எம்.பி காட்டம்

சென்னை: ஏப்.8-

பாஜகவுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு ரகசிய உடன்பாடு உள்ளதாக குற்றம்சாட்டிய மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘இந்தியாவின் ஒரு மூத்த அரசியல்வாதி, மூன்று முறை மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி இப்படிக் கொஞ்சமும் பொறுப்பில்லாமல், உண்மைக்குப் புறம்பாக கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், திமுக கட்சிகளை பாஜகவோடு ரகசிய உடன்பாடு வைத்துள்ளார்கள் என்று பேசுவது அபத்தமானது மட்டுமல்ல, கடுமையான கண்டனத்துக்குரியது.



தமிழகத்தில் நாங்கள் பாஜகவுக்கு எதிராக ஒவ்வொரு தினமும் யுத்தம் நடத்திக் கொண்டுள்ளோம். எமது மொழி, இனம், பண்பாடு, வளர்ச்சி அனைத்துக்கும் எதிராக உள்ள பாஜகவை இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதே எங்கள் இலக்கு. அஇஅதிமுக முகமூடி அணிந்து கூட பாஜக தமிழகத்தில் கால்பதித்து விடக்கூடாது என்பதில் எமது தமிழினம் உறுதியோடு உள்ளது.

எமது தலைவர் ராகுல் காந்தி அச்சமற்று அயராது மோடி அரசுக்கும், பாஜகவுக்கும் எதிராக சமரசமற்ற போராட்டத்தை நடத்திவருகிறார். தமிழகத்தின் உரிமைகளுக்காக முதல்வர் திமுகவின் தலைவர் மு.க.ஸ்டாலின் பாஜகவோடு சமரசமற்று போராடி வருகிறார்.

தேசிய அளவில் நாடாளுமன்றத்தில் நாங்கள் பாஜக அரசை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் திமுக எப்பொழுதும் எங்கள் பக்கம் நிற்கிறது. ஆனால் திரிணமூல் காங்கிரஸ் பல நேரங்களில் அப்படிச் செயவதில்லை. ஆனாலும் உங்கள் மீது எந்த அவதூறுகளையும் நாங்கள் பரப்பியதில்லை. ஏனென்றால் பாஜகவுக்கு எதிரான யுத்தத்தில், நாட்டின் நலன் கருதி எதிர்கட்சிகள் ஒன்றாகவே பயணிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நீங்களும் அந்த நிலைப்பாட்டிலேயே நில்லுங்கள். அதுதான் மேற்கு வங்கத்துக்கும், இந்தியாவுக்கும் நல்லது.

நீங்கள் 15 ஆண்டு காலம் செய்த சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேளுங்கள். மக்கள் உங்கள் பக்கம் நிற்பார்கள். கூட்டணிக் கட்சிகளை அவதூறு செயவதன் மூலம் நீங்கள் அடையக் கூடியது ஒன்றும் இல்லை. தமிழகத்தில் மட்டுமல்ல கேரளம், புதுச்சேரி, அசாம் ,மேற்கு வங்கம் உள்ளிட்ட எந்த மாநிலத்திலும் பாஜக வெல்லக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவைத் தோற்கடித்து, இந்தியாவைப் பாதுகாக்க எமது தலைவர் ராகுல் காந்தி தலைமையேற்று நடத்தும் போராட்டத்தில் நீங்கள் பங்கேற்காவிட்டாலும் பரவாயில்லை. பலவீனப்படுத்த முயற்சி செய்யாதீர்கள். இந்த தேசம் உங்களை மன்னிக்காது’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று மேற்கு வங்கத்தில் பிரச்சாரம் செய்த மம்தா பானர்ஜி, “தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் கட்சியினர் பாஜகவுடன் ரகசிய உடன்பாடு வைத்துள்ளனர்.

தேர்தல் ஆணையம் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட திறமையான ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் அதிகாரிகளைத் தமிழகத்துக்கு தேர்தல் பார்வையாளர்களாக அனுப்பியுள்ளது. இதன் மூலம் மேற்கு வங்கத்தில் பாஜக தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறது. மேற்கு வங்க மாநிலத்தின் முக்கிய பொறுப்புகளில் தங்களுக்குச் சாதகமான அதிகாரிகளை பாஜக அமர்த்துகிறது” என்று அவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## “மதுரை மெட்ரோ திட்ட அறிக்கையை கூட முறையாக தயாரித்து தரவில்லை”

### முதல்வர் ஸ்டாலின் மீது அண்ணாமலை சாடல்



சென்னை: ஏப்.8-

‘மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின் முறையாகத் தயாரித்துக் கொடுக்கவில்லை’ என தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, முறையாகத் தயாரித்துக் கொடுக்க இயலாத கையாலாகாத திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின்.

மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கூறியதன் பொருள் என்னவென்றால், தமிழகத்தில் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அமையவிருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில், விரிவான திட்ட அறிக்கை முறையாகத் தயாரிக்கப்பட்டு, மதுரை மெட்ரோ திட்டத்துக்கான அனுமதி பெறப்படும் என்பதுதான்.

ஆட்சிக்கு வந்தவுடன், வெளிநாட்டு முதலீடு ஈர்ப்பு என்ற பெயரில் குடும்பத்துடன் பலமுறை இன்பச் சுற்றுலா சென்றீர்களே... என்ன முதலீடு வந்தது? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது? மத்திய அரசின் திட்டங்களால் பெறும் வளர்ச்சிக்கு, உங்கள் ஸ்டிக்கரை ஒட்ட கூச்சமாக இல்லையா?

உங்கள் ஆட்சியில், குப்பை அள்ளுவதில் கூட ஊழல் செய்து, சென்னை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட மாநகரங்களை குப்பைக் கூடங்களாக மாற்றி, குப்பை மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்களே. மதுரையில் அமைப்போம் என்று உங்கள் தேர்தல் வாக்குறுதியில் கூறிய வேளாண் பல்கலைக்கழகம் எங்கே?’ எனத் தெரிவித்துள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## “மத்திய அரசு திட்டங்களுக்கு திமுக ஸ்டிக்கர் ஒட்டுகிறது” ஜி.கே.வாசன்

கும்பகோணம்: ஏப்.8-

மத்திய அரசின் திட்டங்களை எல்லாம், திமுக அரசு ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறது என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் குற்றம்சாட்டியுள்ளார்.

கும்பகோணம் தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளரை ஆதரித்து ஜிகே.வாசன் பிரச்சாரம் மேற்கொண்டார். கும்பகோணம் காந்தி பூங்கா அருகில் வேட்பாளர் அசோக் குமாருக்கு தாமரை சின்னத்தில் வாக்கு கேட்டு தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் பேசியதாவது: கோயில் நகரமான கும்பகோணத்தில் கோயிலுக்கு செல்லாதவர், அந்தப் பக்கம் பார்க்காதவரை எம்எல்ஏவாக தேர்ந்தெடுத்தீர்கள். இந்த நிலை மாற வேண்டும்.



பிரதமர் மோடி இந்தியாவை வல்லரசாக மாற்றுவார், அதற்கு ஏற்றவாறே அவருடைய பணிகள் இருக்கின்றன. இந்தியா இன்றைக்கு பாதுகாப்பான நாடாக இருக்கின்றது என்றால், அதற்கு பாஜக தான் காரணம். மத்தியில் இன்றைக்கு மக்களாட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மக்கள் விரோத திமுக அரசு, வாக்கு வங்கிக்காக மத்திய அரசினுடைய திட்டங்களைப் பெறாமல், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க நினைக்கிறது திமுக அரசு.

மத்திய பாஜக அரசை, திமுக அரசு எதிர்க்கட்சியாகப் பார்க்கவில்லை, எதிரிக் கட்சியாகப் பார்க்கிறது. அதன் அடிப்படையிலேயே இன்றைக்கு பல துறைகளிலே தமிழகம் வளரவில்லை, உயரவில்லை, சிறக்கவில்லை. மத்திய அரசினுடைய திட்டங்களை எல்லாம், திமுக அரசு ஸ்டிக்கர் ஒட்டிக்கொண்டு, விளம்பரம் தேடிக்கொண்டிருக்கிறது. மகளிருக்குப் பாதுகாப்பு இல்லாத மாநிலம் என்றால் அது தமிழகம் தான். ஒவ்வொரு தனி மனிதனும் தமிழனும் தலைகுனிய வேண்டிய விஷயம் இது. இதற்கு காரணம் திமுக அரசு.

தமிழகத்தில் சட்டவிரோதச் செயல்கள், டாஸ்மாக் போதை கலாச்சாரம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதை, கட்டுப்படுத்தத் தவறியதற்குக் காரணம், திமுக அரசின் நிர்வாகத் திறமை இல்லாததே காரணம். முன்னாள் முதல்வர் பழனிசாமி, ஆட்சியில் தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது. அந்த அமைதியான சூழல் மீண்டும் தமிழகத்திற்குத் திரும்ப வேண்டும். தமிழகம் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கவும், அமைதி நிலை நாட்டப்படவும் ஒரு வலுவான அரசியல் கூட்டணி அவசியமாகிறது. மத்திய மாநில அரசுகளின் இணக்கம் தேவை. அதாவது டபுள் இன்ஜின் சர்க்கார்.

தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவெடுக்க வேண்டுமானால், மத்திய அரசும் மாநில அரசும் ஒரே நேர்க்கோட்டில் இணைந்து செயல்பட வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் தடையின்றி மக்களைச் சென்றடைய, பிரதமர் மோடி, பழனிசாமி ஆகியோரின் கரங்கள் வலுப்பட வேண்டும். அப்போது தான் காமராஜரின் பொற்கால ஆட்சி மீண்டும் மலரும்.

தற்போதைய அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். கும்பகோணம் குப்பை நகரமாக' மாறியுள்ளது கவலையை அளிக்கிறது. ஆன்மிக நம்பிக்கையற்றவர்களுக்கும், நகரத்தைப் பேணிப் பாதுகாக்கத் தவறியவர்களுக்கும் மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

கும்பகோணம் பேருந்து நிலையத்தை நகருக்கு வெளியே கொண்டு செல்வதை இந்தக் கூட்டணி அனுமதிக்காது. பழனிசாமி தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன், கும்பகோணத்தை தனி மாவட்டமாக தரம் உயர்த்துவதே முதல் முக்கியப் பணியாக இருக்கும். இது இந்த நகருக்கு வழங்கப்பட வேண்டிய உரிய கவுரமாகும்” என்று ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.



## விருத்தாசலம் சட்ட மன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் பங்குபெற்ற செயல்வீரர்கள் கூட்டம்

கடலூர், ஏப்.8-

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் சட்ட மன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் பங்குபெற்ற செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் முன்னாள் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் சிவி கணேசன் தலைமை தாங்கி பேசினார். விருத்தாசலம் சட்டமன்ற தொகுதியில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்தை ஆதரித்து பரப்புரையில் ஈடுபட்டேன். மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக கழக அரசு செய்த சாதனைகளையும் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி இருப்பதையும், மக்களிடம் எடுத்துக் கூறி திமுகவின் வெற்றி வேட்பாளர் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என உரையாற்றினார். வெற்றி வேட்பாளர் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேசும் போது நான் விருத்தாசலம் தொகுதியில் வெற்றி பெற்றால் முதலில் விருத்தாசலம் தொகுதி தனி மாவட்டமாக அண்ணன் மு.க.ஸ்டாலினிடம் கேட்டு பெற்று தருவேன் என உறுதி அளித்தார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம்வாக்களிப்பதன் அவசியம் குறித்து குறும்படங்கள் ஒளிபரப்பபட்டன





நீலகிரி, ஏப்.8-

நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம் கோத்தகிரி பேருந்து நிலையம் கட்டபெட்டு பகுதிகளில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து குறும்படங்கள் ஒளிபரப்பபட்டன

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 யை முன்னிட்டு, ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதையொட்டி, பழங்குடியின வாக்காளர்கள், இளம் வாக்காளர்கள், வாக்காளர்கள் அதிகம் கூடும் இடங்களில், தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர்களிடையே வாக்களிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரங்கோலி கோலப்போட்டி, விளையாட்டு போட்டி, கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் எந்தவித எதிர்பார்ப்புகளும் இன்றி வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவும், 100 சதவீதம் வாக்குபதிவினை வலியுறுத்தியும், தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள பல்வேறு விழிப்புணர்வு குறும்படங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம் ஒளிபரப்பப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இன்றைய தினம் 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி பேருந்து நிலையம் மற்றும் கட்டபெட்டு ஆகிய பகுதிகளில் ஒளிபரப்பப்பட்ட விழிப்புணர்வு குறும்படங்களை ஏராளமாக வாக்காளர்கள் பார்வையிட்டு நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிப்போம் என உறுதி அளித்தனர்.



## உதகை தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் ராமசந்திரன் ஆதரித்து ஆ.இராசா வாக்கு சேகரிப்பு


உதகை, ஏப்.8-

நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பாற்ற முற்போக்கு கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் உயிலட்டி பி.ராமசந்திரன் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம், உதகையில் திமுக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது, மாவட்ட காங்கிரஸ் தலைவர் நாகராஜ் வரவேற்றார்.

கூட்டத்தில் திமுக துணை பொதுச்செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா உதகை தொகுதி வேட்பாளர் ஆதரித்து வாக்குசேகரித்தார்.

மாவட்ட திமுக பொறுப்பாளர் குன்னூர் தொகுதி வேட்பாளர் கே.எம்.ராஜூ தேர்தலில் பணி செயலாளர் கா.ராமசந்திரன், சி.பி.எம் மாவட்ட செயலாளர் பாஸ்கரன், சி.பி.ஐ மாவட்ட செயலாளர் போஜராஜ், முஸ்லீம் லீக் நகர செயலாளர் அன்வர், விசிக சகாதேவன், மாவட்ட செயலாளர் மோகன், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் அபுதாகீர், மதிமுக மாவட்ட செயலாளர் சிவகுமார், தேமுதிக மாவட்ட செயலாளர் பாத்மநாபன், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் ஜாகீர் ஹாசன், மஜக மாவட்ட செயலாளர் கார்த்திக், ஷிஞிறிமி பெரோஸ்கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் உதகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திமுக. கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் செயல்வீரர்கள் திராளாக கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார் நன்றி கூறினார்.



■ நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் தேன்மொழி சேகர் தேர்தல் நடத்தும் அதிகாரி சுகுமாரன் தாசில்தார் ஜெயபிரகாஷ் அவர்களிடம் தனது வேட்புமனவை வழங்கினார் ஒன்றிய செயலாளர் யாகப்பன் ஒன்றிய செயலாளர் களஞ்சியம் மற்றும் ஏராளமான பொதுமக்கள் உடன் இருந்தனர்



## ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் வேட்புமனு தாக்கல்!

ஜோலார்பேட்டை, ஏப்.8-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி நாட்றம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் முருகேசனிடம் கூட்டணிகட்சி நிர்வாகிகளுடன் திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி வேட்பு மனு தாக்கல் செய்தார். மேலும் வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த திமுக வேட்பாளருக்கு நாட்றம்பள்ளி பேரூர் கழக செயலாளர் என்.கே.ஆர்.சூரியகுமார், தேர்தல் குழு பொறுப்பாளர் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் தாமரைசெல்வன், ஜோலார்பேட்டை ஒன்றிய செயலாளர்கள் க.உமா கன்ரங்கம், சதீஷ்குமார், அசோக்குமார், சுரேஷ்குமார் தேமுதிக மாவட்ட செயலாளர் ஷரிகிருஷ்னன், மாவட்ட பொருளாளர் ஆஞ்சி, விசிக மாவட்ட செயலாளர் மற்றும் பொறுப்பாளர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் கட்சி மாவட்ட செயலாளர் பொறுப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சியில் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பல்வேறு அணியைச் சேர்ந்த அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் உற்சாக மேலும் அமைப்பாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் வரவேற்பு அளித்தனர். நாட்றம்பள்ளி ஏரிக்கொடி பகுதியில் இருந்து மேளதாளனுடன் 10000க்கு மேற்பட்ட தொண்டர்கள் வரவேர்பு அளித்தனர்.





## மாதவரம் தெற்கு பகுதி 30வது வார்டில் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.8-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனம் மாதவரம் தெற்கு பகுதி 30 வது வார்டு அனைத்து பகுதிகளில் மாதவரம் தெற்கு பகுதி 30வது வட்ட கழக செயலாளரும், 30 வது வார்டு மாமன்ற திமுக கவுன்சிலருமான திருமலை ஜி.துரைசாமி தலைமையில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அதேபோல் வழிநெடுகிலும் பட்டாசு வெடித்து, மாலை அணிவித்து,பொன்னாடை போர்த்தி பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்றனர்.மேலும் 30 வது வார்டில் தேர்தல் பணிமனை திறக்கப்பட்டது.இதில் மண்டலக்குழு தலைவர் நந்தகோபால், மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் குருமூர்த்தி உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



### “வாக்குறுதி நிறைவேற்றிய தலைவர் மு.க.ஸ்டாலின்

## திருப்பரங்குன்றத்தில் கீர்த்திகா தங்கப்பாண்டி வாக்குறுதி மழை

மதுரை ,ஏப்.8-

“பாதாள சாக்கடை முதல் பூங்கா வரை தீர்வு; மக்களுக்காக தொடர்ந்து பாடுபடுவேன் என உறுதி”

மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி, மாலை பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அனுப்பானடி ஸ்ரீ சிந்தாமணி சந்திப்பு, ஹவுசிங் போர்டு, ஏ.பி.டி. பள்ளி, ராஜமான் நகர் உள்ளிட்ட இடங்களில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பெண்கள் மற்றும் இளைஞர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பொதுமக்கள் மத்தியில் தேர்தல் பரப்புரையாக, “திருப்பரங்குன்றத்தில் உதயசூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக உங்கள் ஆதரவை நாடி வந்துள்ளேன். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளது. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் தான்,” என்றார்.

மேலும், “நான் வெற்றி பெற்றால், இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பூங்கா அமைத்தல், 33 ஆண்டுகளாக நீடிக்கும் பாதாள சாக்கடை பிரச்சினை தீர்த்தல், வாரச் சந்தையை தினசரி சந்தையாக மாற்றுதல், வியாபாரிகளுக்கு புதிய கட்டிட வசதி, சமுதாயக் கூடம் கட்டுதல் மற்றும் அரசு பள்ளி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்,” என உறுதியளித்தார்.

நான் புதியவர் அல்ல எப்போதும் என்னை தொடர்புகொள்ளலாம். மக்களுக்காக தொடர்ந்து பாடுபடுவேன். யார் நன்மை செய்தார்கள் என்பதை கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும் என தெரிவித்தார்.



## ஜோலார்பேட்டை தொகுதியில் திமுக வேட்பாளரை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பில் வாரிசுகள்

:திருப்பத்தூர், ஏப்.8-

:திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து அவருடைய மகள் டாக்டர் விஸ்வ லட்சுமி மற்றும் மகன் சக்தி ஆகியோர் சின்ன மூக்கனூர் ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். உடன் சின்ன மூக்கனூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயா திருப்பதி, மாவட்ட பிரதிநிதி ரோஜா தயாநிதி மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாக்குகளை சேகரித்து வருகின்றனர்



■ மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் கும்மிடிப்பூண்டி தொகுதி வேட்பாளர் டி.ஜே.கோவிந்தராஜ் அவர்கள் பூண்டி வடக்கு ஒன்றியம் சீத்தேரியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே ரமேஷ்ராஜ் முன்னிலையில் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான் பொன்னுசாமி மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் K.V.லோகேஷ் துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் தில்லைகுமார் ஒன்றிய அமைப்பாளர்வழக்கறிஞர்குமரேசன் ஒருங்கிணைப்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து இரண்டாவது கட்ட பிரச்சாரத்தை தொடங்கினார்

மாலை தந்தி

புதன்கிழமை 08.04.2026



# மோரை ஊராட்சி அண்ணா நகரில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு உற்சாக வரவேற்பு

மாதவரம், ஏப்.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் மோரை ஊராட்சி அண்ணா நகரில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும், சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு தமிழ்நாடு பாடநூல் நிறுவன தலைவர் திண்டுக்கல் ஐ லியோனி வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அப்போது வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சதீஷ்குமார் ஏற்பாட்டில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் மோரை கோ. தயாளன் முன்னிலையில் பட்டாசு வெடித்து மேளதாளத்துடன் வேட்பாளருக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை மற்றும் கிரீடம் அணிவித்து ஆரத்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்பளிக்கப்பட்டது. இதில் நிர்வாகிகள் திவாகரன், அண்ணாதுரை, குணாதயாநிதி, இளம்பருதி, விஜயகுமார், குமரவேல், ஸ்டீபன், சாமு மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடும் நுண் பார்வையாளர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் பணிகள் ஒதுக்கீடு



தேனி, ஏப்.08-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வா க்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடும் நுண்பார்வையாளர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் (Randomization) பணிகள் ஒதுக்கீடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங். தலைமையில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் பீம் சிங், மற்றும் .வினய் பிரதாப் சிங். முன்னிலையில் நடைபெற்றது

தமிழ்நாடு சட்டமன்றப் தேனி மாவட்டத்தில் உள்ள பொதுத்தேர்தல் 198.ஆண்டிபட்டி 2026 8 முன்னிட்டு 199. பெரியகுளம் (தனி) 200.போடிநாயக்கனூர் மற்றும் 201கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. 1394 தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கச்சாவடி மையங்களுக்கு 1,671 வாக்குப்பதிவு இயந்திரங்களும் (ஙிஹி). 1671 கட்டுப்பாட்டுக் கருவியும் (CU) வாக்காளர்கள் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் 1810 (VVPAT) இயந்திரங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1394 வாக்குச்சாவடி மையங்களுக்கு 1,673 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், நிலை 1 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1673 நபர்களும், நிலை 2 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1673 நபர்களும், நிலை 3 வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1673 நபர்களும் என மொத்தம் 6,692 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தேர்தல் நடவடிக்கைகளில் நுண்பார்வையாளர்களின் பணி மிகவும் முக்கியமானதாகும். அதனடிப்படையில், மத்திய அரசு நிறுவனங்கள், வங்கிகளில் பணிபுரியும் 227 அலுவலர்கள் தேர்தல் நுண்பார்வையாளர்களாக நியமிக்க ப்பட்டுள்ளனர். அந்தவகையில் நியமிக்கப்பட்டுள்ள நுண்பார்வையாளர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு தொடங்கி முடியும் வரை தொடர்ந்து கண்காணித்து பணிகளை முறையாக மேற்கொண்டு, வாக்குப்பதிவினை நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்திட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாவட்ட இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது). ராமகிருஷ்ணன், வட்டாட்சியர் (தேர்தல்) .சுருளி, முன்னோடி வங்கி மேலாளர் .கார்த்திகேயன், செய்தி மக்கள் தொடர்புஅலுவலர் .ஏ.எடிசன் மற்றும் வங்கி அலுவலர்கள், எல்ஜசி நிறுவன அலுவலர்கள் உள்ளிட்ட மத்திய அரசு பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# நிலக்கோட்டையில் திமுக வேட்பாளர் நாகஜோதி வேட்பு மனு தாக்கல்

நிலக்கோட்டை, ஏப்.8-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் எஸ் நாகஜோதி தனது ஆதரவாளர்களுடன் நேற்று நிலக்கோட்டை சட்டமன்றத் தேர்தல் நடத்தும் அலுவலர் சுகுமாரனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அந்த மனுவில் தனது பெயரில் 36 லட்ச ரூபாய் சொத்து மதிப்போம் தனது கணவர் சக்திவேல் பெயரில் 63 லட்சமும் மற்றும் 3 ஏக்கர் நிலம் உள்ளதாகவும் குறிப்பிட்டு இருந்தார். அப்போது உடன் நிலக்கோட்டை திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் மணிகண்டன், வத்தலகுண்டு ஒன்றிய செயலாளர்கள் முருகன், கனிக்குமார், உள்பட பலர் இருந்தனர். இதேபோன்று த.வே.க. அய்யனார் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

புரட்சித் தலைவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் வேட்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன் மற்றும் புதிய தமிழகம் கட்சி வேட்பாளர் சங்கர் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.



■ இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி, 050.திருப்பத்தூர் சட்டமன்றத்தொகுதி தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் நகராட்சி பகுதியில், பாகம் எண்.103 இல் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வாக்குச்சாவடி மையத்தில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட வாக்காளர்களுக்கு சாய்வு தளம், குடிநீர், இருக்கை வசதி, கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து, முன்னேற்பாடு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி.இ.ஆ.ப., (06.04.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் வடக்கு ஒன்றியம், ஒரப்பம் ஊராட்சியில் காத்தான்பள்ளம், நாகம்பட்டி, சின்னகண்டம்பட்டி, பெரியகண்டம்பட்டி, சின்னஒரப்பம், பையம்பட்டி, மருதேப்பள்ளி, கிட்டப்பநாயனப்பள்ளி ஆகிய கிராமங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக பருகூர் தொகுதி வேட்பாளர் மதியழகன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



# சென்னை பெருநகர மாநகராட்சி 29 வது வார்டில் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப். .8-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனம் சென்னை பெருநகர மாநகராட்சி 29வது வார்டு அனைத்து பகுதிகளில் சென்னை பெருநகர மாநகராட்சி 29வது மாமன்ற திமுக கவுன்சிலர் கார்த்திக்கேயன் திருநாவுக்கரசு தலைமையில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.சுமார் 200க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவமாணவிகள் தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக சென்றனர். அதேபோல் வழிநெடுகிலும் பட்டாசு வெடித்து, மாலை அணிவித்து,பொன்னாடை போர்த்தி பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்றனர்.மேலும் 29வது வார்டில் தேர்தல் பணிமனை திறக்கப்பட்டது.இதில் மண்டலக்குழு தலைவர் நந்தகோபால், பெருமாள் மற்றும் தேமுதிக மாவட்டச் செயலாளர் டில்லி, காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டத் தலைவர் இளங்கோவன், மாவட்ட இளைஞரணி தேமுதிக செயலாளர் செல்வக்குமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி சூளகிரி அடுத்து செம்பரசன்னபள்ளி உள்ளிட்ட கிராமப் பகுதிகளில் வேப்பனப்பள்ளி அதிமுக வேட்பாளர் கே.பி. முனுசாமி இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

# பல்லாவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் இந்து திராவிட மக்கள் கட்சியின் மாநில தலைவர் பல்லாவரம் தொகுதி வேட்பாளர் டாக்டர் ரமேஷ்பாபுஜி வேட்புமனு தாக்கல் செய்தார்



பல்லாவரம் ஏப். 08-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் இந்து திராவிட மக்கள் கட்சியின் மாநில தலைவர் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் ரமேஷ்பாபுஜி தனது நிர்வாகிகளுடன் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து 06.04.26 அன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் 2026ல் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்கு மாநில தலைவர் ரமேஷ்பாபு போட்டியிடுகிறேன், கடந்த 20 ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் ஊனமுற்றவர்கள் போல் செயல்பட்டு கொண்டு இருக்கிறார்கள் எனவும்

திருநீர்மலை கோயிலில் 1000 கோடி சொத்துக்கள் எந்த கட்சி ஆட்டை போட்டது என தெரியவில்லை ஆனால் 17 சர்வே நெம்பரில் 3 சர்வே நெம்பர் மட்டுமே உள்ளது 15 சர்வே நெம்பர் காணவில்லை எனவும் இதுவரை ஆண்ட ஆட்சியாளர்கள் விற்று சாப்டதாக தகவல் இருக்கிறது எனவும் இவை அனைத்து மீட்டெடுப்பதற்க்காக இந்த தேர்தலில் களம் காண்கின்றோம், இந்தியாவில் தொல்லியல்துறை காப்பற்றுகிறது ஆனால் பாதிமலைகளை காணவில்லை என்றும் கடந்த ஆட்சியில் 150 க்கும் மேற்பட்ட ஆலயங்களை இடித்து தரைமட்டமாக்கி உள்ளனர், இந்த ஆலயங்களை காப்பாற்றவே இந்த தேர்தலில் களம் காண்கின்றேன், தமிழகத்தில் அபின், கஞ்சா உள்ளிட்டவைகளால் தள்ளாடி கொண்டு இருக்கிறது, ஆட்சியாளர்கள் ஆட்சி செய்யும் போது டாஸ்மாக் மூடுவதாக சொன்னார்கள் ஆனால் டாஸ்மால் மூடபடவில்லை , மேலும் 200 பார்கள் உருவாகி உள்ளது. சாராயம் குடிப்பவர்கள் அங்கேய படுத்து விடுவதாகவும் நான் சட்டமன்ற உறுப்பினரானால் டாஸ்மாக் அனைத்து முடபடும் எனவும் பல்வேறு போரட்டாங்களுக்கு இந்த அரசு அனுமதி மறுத்துள்ளதாக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்து பேசினார்.

# ராமநாதபுரம் தொகுதி: உள்ளூர் வேட்பாளர்களுக்கு ஆதரவு அதிகரிப்பு - ராஜகண்ணப்பன் மீது அதிருப்தி

ராமநாதபுரம் ஏப்.08-

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மும்முனைப் போட்டி நிலவுகின்ற நிலையில், கள நிலவரம் குறித்து பொதுமக்கள் மத்தியில் தீவிரமான விவாதங்கள் எழுந்துள்ளன.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் எம்.எல்.ஏ மலேசியா பாண்டியன் மற்றும் டாக்டர் ராம்குமார் பாண்டியன் ஆகியோர் “மண்ணின் மைந்தர்கள்” எனப் பார்க்கப்படுவதால், அவர்களுக்கு மக்களிடையே ஆதரவு அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



இதற்கிடையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் அமைச்சர் ராஜகண்ணப்பன் மீது விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன. அவர் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதும், கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் முதுகுளத்தூர் தொகுதியில் வெற்றி பெற்ற பின்னர் தொகுதிக்கு உரிய கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டும் எதிரொலித்து வருகிறது.

மேலும், தொகுதிக்கு நேரடியாக வராமல் ஆதரவாளர்கள் மூலம் அரசியல் செயல்பாடுகளை மேற்கொண்டதாகவும் குற்றம்சாட்டப்படுகிறது. இதனால், மீண்டும் வாக்கு கேட்க வருவது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த கால செயல்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள், இத்தேர்தலில் ராஜகண்ணப்பனுக்கு பின்னடைவாக அமையக்கூடும் என அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

# மானாமதுரை அருகே எ.கரிசல்குளம் முத்துமாரியம்மன் கோவில் பங்குனித் திருவிழா: பக்தர்கள் நேர்த்திக்கடன்

மானாமதுரை ஏப்.08-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள எ.கரிசல்குளம் கிராமத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் பங்குனிப் பெருந்திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

நேர்த்திக்கடன் மற்றும் வழிபாடுகள்

திருவிழாவின் முக்கிய நிகழ்வாகப் பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தும் வைபவம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனுக்குப் பல்வேறு காணிக்கைகளைச் செலுத்தினர்:



* முளைப்பாரி ஊர்வலம்: கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாகப் பெண்கள் முளைப்பாரி சுமந்து வந்து அம்மனுக்கு வழிபாடு நடத்தினர்.

* அக்கினி சட்டி மற்றும் ஆயிரங்கண் பானை: நேர்த்திக்கடன் வேண்டி பக்தர்கள் கைகளில் அக்கினி சட்டியும், உடல் முழுவதும் ஆயிரங்கண் பானை சுமந்தும் கோவிலைச் சுற்றி வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

* கரும்புத் தொட்டில்: குழந்தை வரம் பெற்ற தம்பதிகள் கரும்பினால் ஆன தொட்டில்களில் குழந்தைகளைச் சுமந்து வந்து தங்களது வேண்டுதலை நிறைவேற்றினர்.

விழா ஏற்பாடுகள்

இந்தத் திருவிழாவிற்கான அனைத்து பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளைக் கோவில் விழா கமிட்டியினர் மற்றும் செர்டு (ஷினிஸிஞி) தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் எல். பாண்டி ஆகியோர் முன்னின்று சிறப்பாகச் செய்திருந்தனர்.

திருவிழாவை முன்னிட்டு எ.கரிசல்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து அம்மன் அருள் பெற்றனர். விழாவின் நிறைவாகப் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



# மோரை ஊராட்சி இளங்கோநகரில் வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர்

மாதவரம், ஏப்.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் மோரை ஊராட்சி இளங்கோ நகரில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும், சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு தமிழ்நாடு பாடநூல் நிறுவன தலைவர் திண்டுக்கல் ஐ லியோனி வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அப்போது மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும் முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான மூ.சதீஷ்குமார் ஏற்பாட்டில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் மோரை கோ. தயாளன் முன்னிலையில் பட்டாசு வெடித்து மேளதாளத்துடன் வேட்பாளருக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை மற்றும் கிரீடம் அணிவித்து ஆரத்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்பளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் திருப்பாசேத்தி அருகே உள்ள சுங்கச்சாவடியில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.திருப்புவனம் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஷ்குமார் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் தர்மேந்திரன் தலைமையில், காவல்துறையினர் அவ்வழியாக சென்ற அனைத்து வாகனங்களையும் நிறுத்தி சோதனை செய்தனர்.தேர்தல் விதிமுறைகள் மீறப்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பயணிகளின் உடமைகள் மற்றும் ஆவணங்களும் கவனமாக பரிசோதிக்கப்பட்டன.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி அரசம்பட்டியில்,பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, வாக்காளர்கள் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பச்சிகானப்பள்ளி ஊராட்சி, பழையபேயனப்பள்ளி கிராமத்தில், 100 சதவிகிதம் வாக்குப்பதிவு குறித்து, இளைஞர்கள் பாராமோட்டர் (Paramotor) மூலம் பறந்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம் கீழக்குயில்குடி அண்ணா பல்கலைக் கழக மண்டல வளாகத்தில் 190 சோழவந்தான் சட்டமன்றம் மற்றும் 197 உசிலம்பட்டி சட்டமன்றம் ஆகிய தொகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு, அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., ஆய்வு மேற்கொண்டார்.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த் இ.கா.ப., உடன் உள்ளார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, பொதுமக்களிடையே 100% வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நடைபெற்ற மாரத்தான் விழிப்புணர்வு ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட போட்டியாளர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப், உதவி ஆட்சியர் (பயிற்சி) ச.வினோதினி, ஆகியோர் முன்னிலையில் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர். அருகில், உதவி காவல் கண்காணிப்பாளர் நேகா. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவா திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் பானுலட்சுமி , தனி வட்டாட்சியர் (கேபிள் டி.வி) மங்கள பாண்டியன் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

# மானாமதுரை பி.ஜே.பியின் சாதனைகள் மற்றும் தேர்தல் வாக்குறுதிகள்: ஒரு பார்வை

மானாமதுரை ஏப்.08-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர் பொன். பாலகணபதி, தொகுதியின் வளர்ச்சி மற்றும் மக்களின் நலன் சார்ந்த பல்வேறு முக்கிய வாக்குறுதிகளை முன்வைத்துள்ளார்.

முக்கிய சாதனைகள்

கடந்த காலங்களில் ரயில்வே நிர்வாகத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளில் பி.ஜே.பி முனைப்புடன் செயல்பட்டுள்ளது:

* ரயில்வே நிர்வாகத்தால் அகற்றப்படவிருந்த வழிவிடு முருகன் கோவில், ஆஞ்சநேயர் கோவில், பள்ளிவாசல், சர்ச் மற்றும் முத்துமாரியம்மன் கோவில் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களை, அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தடுத்து நிறுத்தியது கட்சியின் முக்கிய



சாதனையாகக் கருதப்படுகிறது.

* சுமார் 5 ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்த ரயில்வே ஓய்வூதியர்கள் சங்கக் கட்டிடத்தை, உரிய அனுமதிகளைப் பெற்று கட்டி முடித்துத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முக்கிய தேர்தல் வாக்குறுதிகள்

போக்குவரத்து மற்றும் கட்டமைப்பு வசதிகள்:

* மானாமதுரை ரயில்வே கேட் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, பழைய பேருந்து நிலையம் அருகில் புதிய ரயில்வே



மேம்பாலம் கட்டப்படும்.

* மத்திய அரசின் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மானாமதுரை ரயில்வே நிலையம் நவீன முறையில் மேம்படுத்தப்படும்.

* தாம்பரம் செங்கோட்டை ரயிலுக்கு மானாமதுரையில் புதிய நிறுத்தம் பெற்றுத் தரப்படும். மேலும், சீசன் டிக்கெட் பயணிகள் வசதிக்காக எக்ஸ்பிரஸ் ரயில்களில் ஒரு பெட்டி பிரத்யேகமாக ஒதுக்க ஏற்பாடு செய்யப்படும்.

* கன்னார் தெரு கிருஷ்ணராஜபுரம் இடையே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தரைப்பாலம் கட்டி முடிக்கப்படும்.

* ஆனந்தவள்ளி அம்மன் கோவில் முதல் சீயோன் நகர் வரை வைகையாற்று கரைச்சாலை நிரந்தர தார்ச்சாலையாக மாற்றப்படும்.

தொழில் மற்றும் கல்வி வளர்ச்சி:

* சிப்காட் வளாகத்தில் மூடப்பட்டுள்ள வீடியோகான் ஆலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுத்து, உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

* சிப்காட்டில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனை மீண்டும் நிரந்தரமாகச் செயல்பட வழிவகை செய்யப்படும்.

* மானாமதுரையிலேயே புதிய அரசு மேல்நிலைப்பள்ளி உருவாக்கப்பட்டு, மாணவர்கள் கல்விக்காக வெளியூர் செல்லும் நிலை மாற்றப்படும்.

* தற்போதுள்ள பயணியர் விடுதியை இடமாற்றம் செய்து, அரசு மகளிர் பள்ளியின் இடவசதி விரிவாக்கம் செய்யப்படும்.

நகர மேம்பாடு மற்றும் பொது வசதிகள்:

* மேல்கரை பகுதி மக்களின் வசதிக்காக ரயில்வே காலனி பகுதியில் புதிய மின் மயானம் அமைக்கப்படும்.

* வைகை ஆற்றின் பல்வேறு இடங்களில் முளைப்பாரி கரைப்பதற்கெனப் பிரத்யேகப் படித்துறைகள் கட்டித்தரப்படும்.

* இளைஞர்களுக்காக விளையாட்டு மைதானம் மற்றும் அனைத்து மதத்தினரும் பயன்படுத்தும் வகையில் ஒரு கலை அரங்கம் அமைக்கப்படும்.

* நகரின் அனைத்து தெரு முனைகளிலும் உயர்கோபுர மின்விளக்குகள் (Highmask lamps) பொருத்தப்படும்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என வேட்பாளர் பொன். பாலகணபதி உறுதி அளித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161